# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 89/நகராட்சி/2018**

**நாள் : 26/10/2018**

**திரு M. ஆறுமுகநயினார்,**
**மைலாப்பூர், சென்னை – 600 004.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**செங்கோட்டை நகராட்சி,**
**திருநெல்வேலி மாவட்டம்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, மயிலாப்பூர், டெம்பிள் வியூ, எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை முகவரியில் செயல்பட்டு வரும் கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனத்தின் நிறுவனர் திரு M. ஆறுமுக நாயினார் அவர்களின் சார்பாக தாக்கல் செய்த 13.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 89/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் செங்கோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, மயிலாப்பூர், டெம்பிள் வியூ, எண்.2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை முகவரியில் செயல்பட்டு வரும் கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனத்தின் நிறுவனர் திரு M. ஆறுமுக நாயினார் அவர்களின் சார்பாக செங்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்த அறிவிப்பினை டிரினிடி மிரர் மற்றும் தினபூமி பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்தமைக்காக 59,350/– ரூபாய் வழங்கக் கோரி 15.02.2012 நாளிட்ட இன்வாய்ஸ் செங்கோட்டை நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டதென்றும் ஆனால், மேற்குறிப்பிட்டத் தொகையில் ரூ.28,483/– மட்டும் 20.12.2013 நாளிட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டதென்றும், மீதித் தொகை ரூ.30,867/– இன்றைய நாள்வரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, அத்தொகையினை வழங்கிட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து செங்கோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், செங்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்த அறிவிப்பினை திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் தமிழ் நாளிதழ் ஏதேனும் ஒன்றில் முதல் மற்றும் கடைசி பக்கம் தவிர்த்து மிகச்சிறிய அளவில் விளம்பரம் செய்ய கோரப்பட்டதற்கு மாறாக அவ்விளம்பரம் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் கிரீன்வேஸ் செய்தி மற்றும் விளம்பர நிறுவனத்தினரால்

விளம்பரம் செய்துவிட்டு அதற்கான கட்டணம் ரூபாய்.59,350/– வழங்கக் கோரியதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மாநில அளவில் மேற்கொள்ளும் விளம்பரம் மற்றும் அவ்விளம்பரத்திற்கான செலவினத்திற்கு தணிக்கைத் துறையினரால் தணிக்கைத் தடை எழுப்பப்படும் எனக் கருதப்பட்டு, திருநெல்வேலி மாவட்ட அளவிலான விளம்பரத்திற்கு மட்டும் திருத்தியக் கட்டணம் வழங்கக் கோரப்பட்டது என்றும், அக்கோரிக்கையினை ஏற்று கிரீன்வேஸ் செய்தி மற்றும் விளம்பரம் நிறுவனமும் திருநெல்வேலி மாவட்ட அளவில் மட்டும் விளம்பரப் படுத்தியதற்கு ரூபாய் 28,483/–க்கு திருத்தியக் கட்டணம் வழங்கியது என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். திருத்தியக் கட்டணத்தை ஏற்றுக் கொண்டு நகராட்சியும் மேற்குறிப்பிட்ட விளம்பர நிறுவனத்திற்கு ரூபாய் 28,483/– வழங்கப்பட்டுவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரரின் மனுவினைத் தள்ளுபடி செய்யுமாறு நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தைக் கோரியுள்ளார்.

3. கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனம் சார்பாக அந்நிறுவன அலுவலர் 16.07.2018 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். 09.02.2012 நாளிட்ட செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) கடிதம் எண்.144/2012 தங்களது நிறுவனத்திற்கு முகவரியிட்டு அனுப்பப்படவில்லை என்றும் அக்கடிதம் தகவல் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசு செயலாளர் அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டுள்ளதென்று அந்நிறுவன அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். எனவே, 14.02.2012 நாளிட்ட தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை வெளியீட்டு ஆணை எண்.771/2012–இல் அனைத்துப் பகுதிகளில் டிரினிடி மிரர் நாளிதழிலும் தமிழ்நாட்டில் தினபூமி நாளிதழிலும் விளம்பரம் செய்ய ஆணையிட்ட நிலையில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முழுமையிலும் மேற்குறிப்பிட்ட நாளிதழ்களில் பொது ஏலம் / ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு விளம்பரப் படுத்தப்பட்டதென்றும் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் விளம்பரப் படுத்தியதற்கான கட்டணத்தை தெரிவிக்குமாறு திரும்பத் திரும்ப செங்கோட்டை நகராட்சி கோரியதால் ரூ. 28,483/–க்கு மட்டுமே திருத்திய பட்டியல் வழங்கப்பட்டதென்றும் அத்தொகை தங்கள் நிறுவனத்தில் பெறப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார். எனினும் மீதி விளம்பரத் தொகை ரூபாய் 30,867/– வழங்க ஆணையிடுமாறும் விசாரணையின் போது கேட்டுக்கொண்டார்.

4. செங்கோட்டை நகராட்சி ஆணையரிடம் 03.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. செங்கோட்டை நகராட்சி சம்பந்தப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்த புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்ய 14.02.2012 நாளிட்ட தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசு செயலர் அவர்கள் 771 எண்ணிட்ட ஆணையில் ஆணையிட்டதைத் தொடர்ந்து 15.02.2012 டிரினிடி மிரர் ஆங்கில நாளிதழிலும் தினபூமி தமிழ் நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதென்று விசாரணையின் போது நகராட்சி ஆணையர் தெரிவித்தார். எனினும், மேற்குறிப்பிட்ட ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள் 15.02.2012 அன்று பொது ஏலம் / ஒப்பந்த புள்ளி அறிவிப்பு குறித்த செய்தியினை வெளியிட்ட பின்பே, நகராட்சியின் 05.03.2012 நாளிட்ட கடிதத்தில், செங்கோட்டை நகராட்சி மூலம் சொல்லப்படாத பிற மாவட்டம் மற்றும் மாநிலத்திலும் விளம்பரம் செய்ததை மறுபரிசீலனை செய்து திருநெல்வேலி மாவட்ட பிரசுரத்திற்கான திருத்திய பட்டியலை அனுப்பக் கோரி தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஆணையர் தெரிவித்தார். மேலும், அதுசமயம் பொறியாளர் திரு இராமலிங்கம் என்பவர் ஆணையாளர் பொறுப்பினை வகித்தார் என்றும் அவர் தற்பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பொறியாளராகப் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

5. கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனம் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் அந்நிறுவன அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரின் வாக்கு மூலங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன. செங்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்கள் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலர் அவர்களுக்கு முகவரியிட்ட தனது 09.02.2012 நாளிட்ட கடிதத்தில், சம்பந்தப்பட்ட பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை திருநெல்வேலி

மாவட்ட பதிப்பில் மட்டுமே முதல் மற்றும் கடைசி பக்கம் தவிர்த்து மிகச்சிறிய அளவில் தினசரி தமிழ் நாளிதழ் ஏதேனும் ஒன்றில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்யக் கோரியுள்ளார். எனினும், 14.02.2012 நாளிட்ட தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையால் வெளியிடப்பட்ட வெளியீட்டு ஆணை எண்.771–இல் மேற்குறிப்பிட்ட விளம்பரத்தினை 15.02.2012 நாளன்று டிரினிடி மிரர் (அ.ப) மற்றும் தினபூமி (தமிழ்நாடு) விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யவும் என கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அரசு வெளியீட்டு ஆணை வெளியிடப்பட்ட மறுநாளே 15.02.2012 அன்று மேற்குறிப்பிட்ட பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி அறிவிப்புகள் மேற்குறிப்பிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களிலும் வெளியாகி உள்ளன. எனவே, மேற்குறிப்பிட்ட விளம்பர நிறுவனமும் ரூபாய் 59,350/–க்கான பட்டியல் தொகையை நகராட்சிக்கு அனுப்பியுள்ளது. இந்நேர்வில், மேற்படி விளம்பர நிறுவனம் அரசு ஆணையின்படியே செயல்பட்டுள்ள நிலையில் அந்நிறுவனம் தவறு ஏதும் புரிந்ததாக கருத முடியாது. ஆனால், 09.02.2012 நாளிட்ட நகராட்சி ஆணையரின் கடிதத்தில் கோரப்பட்ட கோரிக்கைக்கு மாறாகவே, 14.02.2012 நாளிட்ட தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை வெளியீட்டு ஆணை எண்.771/2012–இல் டிரினிடி மிரர் மற்றும் தினபூமி ஆகிய ஆங்கில தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது என அறிய நேரிடுகிறது. வெளியீட்டு ஆணை வெளியிடப்பட்ட மறுநாளே அதாவது 15.02.2012 நாளன்று நாளிதழ்களில் விளம்பரமும் வெளியாகி உள்ளன. எனவே, வெளியீட்டு ஆணைக்கு திருத்தம் செய்யக்கோரி முறையிடவும் நகராட்சிக்கு போதிய கால அவகாசம் இல்லை. இந்நிலையில், அரசு வெளியீட்டு ஆணையின்படி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்த கிரீன்வேஸ் அட்வர்டைசிங் மற்றும் பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ. 30,867/–ஐ நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் ஒப்புதலைப் பெற்று வழங்க பரிசீலிக்குமாறு செங்கோட்டை நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இவ்வாணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **26–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு M. ஆறுமுகநயினார்,
   **கிரீன்வேஸ் அட்வர்டைசிங் (ம) பப்ளிசிட்டி நிறுவனம்,**
   **எண்.2, முதல்மாடி, வெங்கடேஸ்வரா அஹ்ரஹாரம் சாலை,**
   **மைலாப்பூர், சென்னை –4.**

2. நகராட்சி ஆணையர்,
   செங்கோட்டை நகராட்சி,
   திருநெல்வேலி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி